# உங்களிடம் மசேநி சேமிப்புகளைப் பயன்படுத்தி வாங்கப்பட்ட சிங்டெல் சிறப்புத் தள்ளுபடி விலையிலானப் பங்குகள் இருக்கிறதா?

1993: சிங்டெல் ஐபிஓ வெளியீடு, முதலீட்டாளர்களைக் கொண்ட நாடு



மூலம்: The Straits Times c SPH Media Limited. மறுபிரதிக்கு அனுமதி கோரப்பட வேண்டும்.

சிங்டெல் சிறப்புத் தள்ளுபடி விலையிலானப் பங்குகளை (SDS) 1993-இல் ST"A" அல்லது 1996-இல் ST2 உங்கள் மசேநி சேமிப்புகளைப் பயன்படுத்தி வாங்கிய ஞாபகம் இருக்கிறதா?

உங்கள் SDS பங்குகளைப் பார்க்கவும், மேல் விவரங்களுக்கும் அதிகாரத்துவ இணையத்தளம் **sds.singtel.com** நாடவும் அல்லது **1713** அழைக்கவும்.

பெரும்பாலான சிங்கப்பூரர்களுக்கு பங்கு உடைமை புதிது என்பதால் மசேநி கழகம் சிங்கப்பூரர்களுக்கு பங்குகளை வாங்க நியமிக்கப்பட்டது.

சிங்கப்பூரர்கள் இப்போது பங்கு உரிமையைப் பற்றி நன்கு தெரிந்திருப்பதால், SDS திட்டம் அதன் நோக்கத்தை அடைந்துள்ளது. மசேநி கழகத்துடன் இருந்த பழைய ஏற்பாடு இனி தேவையில்லை.

சிங்டெல் குழுமம், SDS பங்குகளை மசேநி கழகத்திடமிருந்து உங்களின் மத்திய வைப்பகக் (CDP) கணக்கிற்கு இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது. இதன்மூலம் உங்கள் பங்குகளை நீங்கள் நேரடியாக வைத்துக்கொண்டு, நிர்வகிக்கலாம். பங்குதாரர் என்ற உரிமையை நேரடியாகச் செயல்படுத்தவும் உங்களால் முடியும்.

சிங்க்டெல் SDS பரிமாற்றம் 2026 நவம்பர் 21 அன்று திட்டமிடப்பட்டுள்ளது.

# நீங்கள் என்ன செய்யலாம்?

## உங்கள் சிங்டெல் SDS-ஐ வைத்துக் கொள்ளலாம்

**நீங்கள் ஒன்றும் செய்யத் தேவையில்லை.** உங்களுக்கு தனிநபர் CDP கணக்கு இருந்தால், உங்கள் பங்குகள் அதற்கு இடமாற்றப்படும். அல்லது உங்களுக்காகத் திறக்கப்படும் நியமிக்கப்பட்ட CDP கணக்கிற்கு இடமாற்றப்படும்.

இரு நிலைகளிலும், பங்குகள் உங்கள் பெயரில் இருக்கும். எப்போது வேண்டுமானாலும் நீங்கள் அவற்றை விற்கலாம்.

**அல்லது**

## உங்கள் சிங்டெல் SDS-ஐ விற்கலாம்

உங்கள் பங்குகளை[1] ஃபிலிப் செக்யூரிட்டீஸ் இணையத்தளம், சிங்போஸ்ட் கிளைகள், அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட SGX சில்லறை விற்பனைத் தரகர்கள்[2] மூலம் நீங்கள் விற்கலாம். அதிலிருந்து கிடைக்கும் விற்பனை வருமானத்தை உங்களின் மசேநி சாதாரணக் கணக்கில் வைத்துக் கொள்ளலாம், அல்லது மசேநி கணக்கோடு இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கில் பெறலாம். விற்பனை வருமானத்திற்கு மசேநி பணமெடுப்பு நிபந்தனைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

### ▶ இணையம் வழி

ஃபிலிப் செக்யூரிட்டீஸ் இணையத்தளத்தில் விற்கலாம்.

QR குறியீட்டை வருடிப் ஃபிலிப் செக்யூரிட்டீஸ் இணையத்தளத்திற்குச் செல்லலாம்.

**sds.singtel.com**

### ▶ நேரில்

சிங்போஸ்ட் கிளையில் நேரடியாக விற்கலாம்.

**singpost.com/locate-us** இணையத்தளத்திற்குச் சென்று சிங்போஸ்ட் கிளைகளின் முழு விவரத்தையும் பெறலாம்.




[1] ஒரு பகுதியை மட்டும் விற்க முடியாது.

[2] ஃபிலிப் செக்யூரிட்டீஸ் சிங்டெல் SDS பங்குகளை விற்க வசதி செய்து கொடுக்க நியமிக்கப்பட்டுள்ளப் பங்குத் தரகு நிறுவனம். நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட SGX சில்லறை விற்பனைத் தரகர்கள் மூலமும் அவற்றை விற்கலாம். முழுப் பங்குத் தரகர் பட்டியலை sds.singtel.com இணையத்தளத்தில் பார்க்கவும்.

**மோசடிகளிலிருந்து பாதுகாப்பாக இருங்கள்**

சிங்டெல்லும் மசேநி கழகமும் உங்கள் வங்கி விவரங்கள் அல்லது சிங்டெல் SDS விற்பதற்குக் கட்டணம் போன்றவற்றை ஒருபோதும் கேட்கமாட்டார்கள். நிச்சயமாகத் தெரியவில்லை என்றால் தயவு செய்து 24/7 ஸ்கேம்ஷீல்டு மோசடித் தடுப்பு உதவி எண் 1799 அழைக்கவும்.

**மறுப்புகள்**

இந்தக் கையேடு பொதுப் பயன்பாட்டுக்கானது. பொதுவான நிலவரம்பற்றிய தகவல்களைக் கொடுக்கிறது. இதில் SDS அல்லது சிங்டெல் பங்குகளுக்குச் சலுகையோ, பரிந்துரையோ, ஒப்பந்தம் கோருதலையோ கொண்டிருக்கவில்லை. இதில் எந்த ஒரு முதலீட்டு ஆலோசனையும் இருக்காது. அல்லது குறிப்பிட்ட முதலீட்டு இலக்கு, நிதி நிலை அல்லது இதைப் பெறும் எந்த ஒரு நபரின் தனிப்பட்ட தேவை ஏதும் இதில் இருக்காது. முதலீடு, பங்குகளை விற்பது அல்லது வர்த்தகம் செய்வதற்கு சிங்டெல் SDS அல்லது சிங்டெல் பங்குகள் உள்பட, நீங்கள் நிபுணத்துவ நிதி ஆலோசகர்களின் ஆலோசனையை நாட வேண்டும்.